ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2449/60 - 2025 අගෝස්තු මස 15 වැනි සිකුරාදා - 2025.08.15
*2449/60 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆம் திகதி.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2025 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் முன்வைத்த 2025 யூலை 24 ஆம் திகதிய 25/1339/807/016-I ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான 2025 ஓகத்து 04 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.

1A - PG 7232 — 404 (2025/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. 2024 மே 17 ஆம் திகதிய 2384/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 12 ஆம் இலக்க ஒழுங்குவிதி, அதில் ''2025 யூன் மாதம் 30 வரை" என்பதை இரத்துச் செய்து ''2025 செப்தெம்பர் மாதம் 30 வரை" என மாற்றீடு செய்து இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

இவ் ஒழுங்குவிதிகள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2025 யூலை 24 ஆம் திகதிய 25/1339/807/016-I ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான 2025 ஓகத்து 04 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, 2024 ஏப்பிறல் 01 ஆம் திகதிய 24/0644/615/003-I ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான 2024 ஏப்பிறல் 01 ஆம் திகதிய அமைச்சரவையின் அனுமதியின் அடிப்படையில் சுற்றுலாத்துறை விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட ‘‘வாகன இறக்குமதி உரிமமொன்றின்’’ கீழ், 2025 சனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவப்பட்ட கடன் கடிதத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை சுங்கத்திலிருந்து விடுவிப்பு செய்வதற்கு மட்டும் பொருந்தும்.

4. இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம், உரிமம் பெற்ற வங்கிகள் அல்லது வேறு உரிய தொடர்புடைய நிறுவனங்களுக்கு ''செயற்பாட்டு ஆலோசனைகள்" வழங்கப்பட வேண்டும்.

EOG 08 - 0274